சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை – 08

ந.க.எண் 3531 /அ5 / 2023 நாள் .05.2023

பொருள் பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வு ஜூன் /ஜூலை 2023 – பள்ளி மாணவர்கள் மாணவர்கள் பள்ளிகள் மூலமும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் ( sevice centres ) மூலமும் ஆன்லைனில் விண்ணப்பித்தல் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு அறிவுரை வழங்குதல்- சார்ந்து

பார்வை 1. சென்னை – 06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 06569/எச்1/2023 நாள் 09.05.2023 மற்றும் செய்தி குறிப்பு நாள். 18.05.2023

2. சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள். 10.05.2023.

…………………

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் மற்றும் இவ்வலுவலக செயல்முறைகளுக்கு தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் ஜூன்/ஜூலை 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு 11.05.2023 ( வியாழக்கிழமை) முதல் 17.05.2023 ( புதன் கிழமை) வரையிலான நாட்களில் (14.05.2023 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11,மணி முதல் மாலை 5 மணிக்குள் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும் மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறும் தேர்வர்கள் சிறப்பு அனுமதித் திட்டத்தில் 18.05.2023 (வியாழக்கிழமை) முதல் 20.05.2023 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,.

எனவே பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் தங்கள் பள்ளியில் பயின்ற தோல்வியுற்ற மாணவர்களுக்கும் மற்றும் தேர்வுக்கு வருகைபுரியாத மாணவர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து வகைப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது மாணவர்கள் நலன் கருதியும் இணையதளம் வழியாக

Scanned with OKEN Scanner

விண்ணப்பிப்பதற்கான நாட்கள் 23.05.2023 வரைநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 23.05.2023 வரை விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 24.05.2023 (புதன்கிழமை) முதல் 26.05.2023 (வெள்ளிக் கிழமை) வரையிலான நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும் என அனைத்து வகை பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உரிய விவரங்களை அளிப்பதுடன் தோல்வியுற்ற மற்றும் தேர்விற்கு வருகை புரியாத எம்மாணவர்களையும் விடுபடாமல் துணைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க உரிய அறிவுரை வழங்க அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் மற்றும் அரசு சேவை மையங்களாக செயல்படும் பள்ளிகளுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

23.5.23

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் சென்னை மாவட்டம்
2. அரசு சேவை மையத்தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்

நகல்

அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) (தனியார்பள்ளிகள்) (தொடக்கக்கல்வி) சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது

Scanned with OKEN Scanner

படிவம்

பள்ளியின் வகை.

| வ.எண் | பள்ளியின் பெயர் | பள்ளியின் வகை | தோல்வியுற்ற மாணவர்களின் எண்ணிக்கை | தேர்விற்கு வருகை புரியாத மாணவர்களின் எண்ணிக்கை | துணைத் தேர்விற்கு விண்ணபத்தவர் களின் எண்ணிக்கை | துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கவில் லை எனில் தங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

தலைமையாசிரியர் கையொப்பம்

Scanned with OKEN Scanner